வணிகக்கல்வி

வெளிநாட்டு வியாபாரம்



e-thaksalawa
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 11.4

வெளிநாட்டு வியாபாரம்

ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் அல்லது நாடுகளுடன் மேற்கொள்கின்ற வியாபாரம் வெளிநாட்டு வியாபாரம் ஆகும். உலக நாடுகள் தமக்கு தேவையான உற்பத்திகளை தாமே முழுமையாக உற்பத்தி செய்ய முடியாத காரணத்தினால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சர்வதேச வியாபாரத்தில் பெரிதும் தங்கியுள்ளது.

வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகள்

1) இயற்கை வளங்கள் பகிரப்பட்டுள்ள முறைகளிலுள்ள முரன்பாடுகள் காரணமாக அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை அந்நாடுகளில் மாத்திரமே மேற்கொள்ள முடியுமாக வகுத்தல்.

உதாரணம் :- மத்திய கிழக்கு நாடுகள் - கனிய எண்ணெய்

தென் ஆபிரிக்கா - தங்கம்

இலங்கை - தேயிலை

2. **ஒப்பிட்டு ரீதியான கிரய நன்மைகள்**

நாடொன்று பொருட்களை இறக்குமதி செய்வதுடன் ஒப்பிடும் போது குறைந்த கிரயத்தில் அவற்றை உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பின் அப்பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும் எனவும், அப்பொருளை உற்பத்தி செய்வதுடன் ஒப்பிடும் போது குறைந்த கிரயத்தில் அவற்றை இறக்குமதி செய்யக் கூடியதாக இருப்பின் அப்பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் சர்வதேச வர்த்தகம் அவசியமாகின்றது.

உதாரணம் :- ஆடை உற்பத்தி

3. சில உற்பத்தி பொருட்கள் தொடர்பில் சில நாடுகளில் சட்டரீதியான ஏகாதிபத்தியம் காணப்படல் (Patant and Copy Wright)

சில உற்பத்திகளுக்குத் தேவையான தேர்ச்சிகள் மற்றும் தொழில்நுட்பம் சகல நாடுகளிலும் காணப்படாமையும், மட்டுப்படுத்தப்பட்டிருத்தலும்

உதாரணம் :- ரோபோ தொழில்நுட்பம்

மோட்டார் வாகன தொழில்நுட்பம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

4. பண்ட மேம்பாடு

தனது உற்பத்திகளை உலக நாடுகள் முழுவதும் சந்தைப்படுத்துவதற்கான பல்வேறு மேம்படுத்தல் தந்திரோபாயங்களை பயன்படுத்தல்

5. வியாபாரத் தடைகள் குறைவடைதல்

வியாபாரத்திற்கு தடையாகக் காணப்பட்ட தீர்வை வரி மற்றும் தீர்வை வரியல்லாத பெரும்பாலான தடைகள் அகற்றப்பட்டமை



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



1. இறக்குமதி வியாபாரம்

ஒரு நாடு பிற நாடுகளில் இருந்து அல்லது நாட்டிலிருந்து பொருட்கள் சேவைகளை கொண்டு வருதல் அல்லது கொள்வனவு செய்தல் இறக்குமதி வியாபாரம் எனப்படும்.

உதாரணம் :- அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு
கணினிளை கொண்டுவருதல்

2. ஏற்றுமதி வியாபாரம்

ஒரு நாடு இன்னுமொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு பொருட்கள் சேவைகளை அனுப்புதல் அல்லது விற்பனை செய்தல் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும்.

உதாரணம் :- .இலங்கை ஈராக்கிற்கு தேயிலை அனுப்புதல்

3. மீள் ஏற்றுமதி வியாபாரம்

ஏதாவது நாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டினுள் கொண்டு வந்து அவற்றில் மாற்றங்களை செய்து அல்லது செய்யாது மீளவும் வேறொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு அனுப்புதல் மீள் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். இங்கு இறக்குமதியின் போது செலுத்திய தீர்வை வரியினை ஏற்றுமதியின் போது மீள அறவிட்டுக் கொள்ள முடியும்.

உதாரணம் :- துணிகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்து ஆடைகளை உற்பத்தி செய்து வேறு நாடுகளுக்கு எற்றுமதி செய்தல்

4. இறக்கியேற்றல் வியாபாரம்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வராது, துறைமுகத்தினுள் மீள ஒழுங்குபடுத்தி அல்லது ஒழுங்குபடுத்தாமல் மீள இன்னொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் இறக்கியேற்றல் வியாபாரம் எனப்படும்.

உதாரணம் :- இலங்கை இந்தியாவிலிருந்து தேயிலையினை இறக்குமதி செய்து ஈரானிற்கு ஏற்றுமதி செய்தல்

Copyright© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

1. மிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்
2. ஒரு நாடு தன்னால் உற்பத்தி செய்ய முடியாத உற்பத்திகளை இறக்குமதி செய்ய முடிதல்
3. அன்னிய செலாவாணியை உழைத்துக் கொள்ள முடிதல்
4. பொருளாதார ரீதியான சிக்கனங்களை பெற்றக்கொள்ள முடிதல்
   விரிவான சந்தைக்கு பாரிய அளவில் உற்பத்திகளை மேற்கொள்ளும் போது பொருளாதார ரீதியான சிக்கனமொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியும்
5. சர்வதேச வியாபாரத் தொடர்புகள், சர்வதேச ஒத்துழைப்புக்கள் விருத்தியடைதல்
6. புதிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தேர்ச்சிகள் விருத்தியடைதல்
7. பொருளாதார அபிவிருத்திக்கு துணையாக அமைதல்

   உதாரணம் :-
   - வேலைவாய்ப்புக்கள் உருவாதல்
   - மக்களின் வாழ்க்கை மட்டம் உயர்வடைதல்
   - வளங்களின் உச்ச நன்மைகளைப் பெறல்.

சுதந்கிர வர்த்தகம்

எந்தவிதமான தடைகளுமின்றி பல்வேறு பிரிவினர்களும் சுதந்திரமாகப் பொருள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படல் சுதந்திர வர்த்தகம் எனப்படும்



தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நாடுகளுக்கு இடையிலான வியாபாரத்தில் தீர்வை வரியினை விதிப்பதன் மூலம் தடை விதித்தல் தீர்வை வரி தொடர்பான தடைகள் எனப்படும்.

தீர்வை வரி அறவீடுகளுக்கு மேலதிகமாக சுதந்திர வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய தடைகள் தீர்வை அல்லாத தடைகள் எனப்படும்.

உதாரணம் :-

1. இறக்குமதியினை மட்டுப்படுத்தல் / கோட்டா முறை
2. ஏற்றுமதியினை மட்டுப்படுத்தல் / கோட்டா முறை
3. இறக்குமதி/ ஏற்றுமதியினைத் தடை செய்தல்
4. வியாபார ஒப்பந்தங்கள்
5. கடுமையான வெளிநாட்டு செலாவாணிக் கொள்கை.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 01

“ நாடொன்றின் வெளிநாட்டு வியாபாரம் தேவை” எனும் தலைப்பிற்கு சார்பாகவும், எதிராகவும் உள்ள விடயங்களை உள்ளடக்கிய அட்டவணை ஒன்றினை தயாரிக்குக.



© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 02

வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமையும் காரணிகளை உமக்கு தெரிந்த உதாரணங்கள் மூலம் விளக்கிக் காட்டுக.



© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 03

வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்து ஒன்று எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பதனை உதாரணம் மூலம் விளக்கிக் காட்டுக.



© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 04

இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுமதியினை ஊக்கிவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் வசதிகளை இணையத்தின் உதவியுடன் தேடியறிந்து பட்டியல்படுத்துக.



© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 05

சர்வதேச வியாபார வளர்ச்சிக்கு எதிரான தடைகள் பற்றி இணையத்தின் உதவியுடன் தேடியறிந்து பட்டியல்படுத்துக.



© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 06

1. அண்மைக்கால மத்திய வங்கி ஆண்டறிக்கையினை இணையத்தின் உதவியுடன் பெற்று இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பினை தருக.
2. மேற்குறித்த ஆண்டறிக்கையின் உதவியுடன் இலங்கையின் இறக்கமதி கட்டமைப்பினை தருக



© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி வினாக்கள்

1. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகளாக (1)..... (2)..... (3).....(4)..... என்பவற்றைக் குறிப்பிடலாம்.
2. ஒரு நாடு பிற நாடுகளில் இருந்து அல்லது நாட்டிலிருந்து பொருட்கள் சேவைகளை கொண்டுவருதல் அல்லது கொள்வனவு செய்தல் ..... எனப்படும்.
3. ஒரு நாடு இன்னுமொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு பொருட்கள் சேவைகளை அனுப்புதல் அல்லது விற்பனை செய்தல் ..... எனப்படும்.
4. எதாவது நாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டினுள் கொண்டு வந்து அவற்றில் மாற்றங்களை செய்து அல்லது செய்யாது மீளவும் வேறொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு அனுப்புதல் ..... எனப்படும்.
5. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டினுள் கொண்டு வராது, துறைமுகத்தினுள் மீள ஒழுங்குபடுத்தி அல்லது ஒழுங்குபடுத்தாமல் மீள இன்னொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் ..... எனப்படும்.
6. சுதந்திர வர்த்தகத்திற்கு காணப்படும் தடைகளை (1)..... (2)..... எனவும் வகைப்படுத்த முடியும்.

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



கட்டமைப்பு வினாக்கள்

1. வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகளை உதாரணம் மூலம் விளக்குக?
2. வெளிநாட்டு வியாபாரத்தினால் ஒரு நாட்டிற்கு கிடைக்கம் அனுகூலங்களை பட்டியல்படுத்துக?
3. ஒரு நாட்டின் பொருளாதர அபிவிருத்தி வெளிநாட்டு வியாபாரம் எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது என்பதனை ஆராய்க?
4. சுதந்திர வர்த்தகம் என்றால் என்ன?
5. சுதந்திர வர்த்தகத்திற்கு தடையாக அமையும் காரணிகளைக் குறிப்பிடுக?

© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.அம்பிகைதர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர்-வர்த்தகம், (மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk